இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 240 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 27 – வியாழக்கிழமை 10 ஏப்ரல் 2025 – திருச்சி ★★ 12+8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 240: Thiruvalluvar Year - 2056 - Panguni 27 - Thursday 10 April 2025 - Trichy ★★ 12+8 Pages ₹ 5.00

## மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவையின் எண்ணத்திற்கு எதிராக தன்னிச்சையாகச் செயல்பட்டு ஆணவத்துடன் ஆட்டம் போட்டவர்!

# ஆளுநர் ரவியின் செயல்பாடு சட்ட விரோதம்!

## உச்சநீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு!

**சென்னை, ஏப்.10-**

**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவையின் எண்ணத்திற்கு எதிராக தன்னிச்சையாக செயல்பட்டு ஆணவத்துடன் ஆட்டம் போட்டவர் ஆளுநர் ரவி. “தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களை நிறுத்திவைத்த ஆளுநர் ரவியின் செயல்பாடு சட்ட விரோதமானது” என்று உச்சநீதி மன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது.**

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்ட 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் ஆர்.என். ரவி குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார். இந்த மசோ தாக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் தொடர்ந்து கிடப்பில் போடப்பட்டு வந்தன. இதனை எதிர்த்தும், ஆளுநர் ஆர்.என்.ரவி யின் செயலை கண்டித்தும் உச்சநீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த வழக்குகளில் இரு தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலை யில், நீதிபதிகள் பார்திவாலா, மகா தேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியது.

### குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது சட்ட விரோதம்!

அதில், சட்டமன்றத்தில் இரு முறை நிறைவேற்றி அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக் காமல், குடியரசுத் தலைவருக்கு அதனை அனுப்பி வைத்தது சட்ட விரோதம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நிறைவேற்றி அனுப் பப்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் கண்டிப்பாக ஒப்புதல் அளித்திருக்க வேண்டும்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என் ரவி யின் செயல்பாடு நேர்மையானதாக இல்லை, பொதுவான விதிப்படியும்,



மாநில அரசின் ஆலோசனையின் படியும் மட்டுமே ஆளுநர் செயல்பட முடியும் என்று கூறினர்.

### வீண்தடைகளை ஏற்படுத்தக்கூடாது!

மாநில அரசுக்கு ஆளுநர் வீண் தடைகளை ஏற்படுத்தக் கூடாது; அது மக்கள் நலன்களை பாதிக்கும்.

மாநில அரசுக்கு வழிகாட்டுபவ ராக ஆளுநர் இருக்க வேண்டுமே தவிர, அரசியல் எதிரி போல் செயல் படக் கூடாது. தன் விருப்பம்போல் ஆளுநர் செயல்பட முடியாது, தனக்கு சிறப்பு அதிகாரம் இருப்ப தாக கருதுவது தவறு. அரசின் செயல் பாடு களுக்கு இடையூறாக இருக்கக் கூடாது என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

### உச்சநீதிமன்றத்திற்கு சிறப்பு அதிகாரம்!

மேலும், நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் 10 மசோதாக்கள் விவகாரத் தில் ஆளுநர் ஆர்.என்.ரவியின் நடவடிக்கைகள் ரத்து செய்யப்படு கிறது, 2வது முறையாக குடியரசுத் தலைவருக்கு அவர் மசோதாக் களை அனுப்பி வைத்தது செல் லாது, அரசியல் சாசன பிரிவு 142ன் கீழ் உச்சநீதிமன்றத்துக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்க ளுக்கும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது, இந்த மசோ தாக்கள் அனைத்தும் உடனே சட்டமாகி நடைமுறைக்கு வருகிறது என்றும் நீதிபதிகள் தங் கள் தீர்ப்பில் குறிப்பிட்டு இருந்தனர். உச்சநீதிமன்றத்தின் இந்த அதிரடி உத்தரவால் ஆளுநர் ஆர்.என்.ரவி கடும் அதிர்ச்சி அடைந்துள்ளார். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பால் தமிழ் நாடு மட்டுமின்றி நாடுமுழுவதும் ஆளுநரின் செயல்பாடுகளுக்கு கடிவாளம் போடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உச்சநீதிமன்றம் தனி அதிகா ரத்தைப் பயன்படுத்தி ஒப்புதல் வழங்கிய 10 மசோதாக்கள் வருமாறு:-

மசோதாக்கள் தமிழ்நாடு மீன் வள பல்கலைக்கழக திருத்த சட்ட மசோதா - 2020

தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக திருத்த மசோதா - 2020

தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் திருத்த சட்ட மசோதா - 2022

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக திருத்த மசோதா - 2022

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா - 2022

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக திருத்த சட்ட மசோதா - 2022

தமிழ்நாடு பல்கலைக்கழகங் கள் இரண்டாவது திருத்த சட்ட மசோதா - 2022

தமிழ் பல்கலைக்கழக இரண்டா வது திருத்த சட்ட மசோதா - 2022

தமிழ்நாடு மீன்வள பல்கலைக் கழக திருத்த சட்ட மசோதா - 2023

தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக திருத்த சட்ட மசோதா - 2023 ஆகிய மசோதாக்களை அங்கீகரித்து உச்சநீதிமன்றம் தங்களது தீர்ப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது.

## அம்பேத்கர் வாக்கியம்!



**“தமிழ்நாடு சட்ட மன்றம் அனுப்பிய 10 மசோதாக்கள் மீது தமிழ்நாடு ஆளுநர் எடுத்த முடிவு சட்ட விரோதமானது. ‘அரசியல் சாசனத்தை செயல்படுத்து பவர்கள் நல்லவர்களாக இல்லாவிட் டால் அரசியல் சாசனம் மோசமானதா கவே இருக்கும்’” என அம்பேத்கர் வாக்கியத்தை சுட்டிக்காட்டி தமிழ் நாடு ஆளுநருக்கு எதிரான வழக்கில் உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பை வழங்கியுள்ளது.**

## உச்சநீதிமன்றம் தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி

# ஒப்புதல் வழங்கிய 10 மசோதாக்கள் !

- **தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக திருத்த சட்ட மசோதா - 2020**
- **தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக திருத்த மசோதா - 2020**
- **தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் திருத்த சட்ட மசோதா - 2022**
- **தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக திருத்த மசோதா - 2022**
- **தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா - 2022**
- **தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக திருத்த சட்ட மசோதா - 2022**
- **தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் இரண்டாவது திருத்த சட்ட மசோதா - 2022**
- **தமிழ் பல்கலைக்கழக இரண்டாவது திருத்த சட்ட மசோதா - 2022**
- **தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக திருத்த சட்ட மசோதா - 2023**
- **தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக திருத்த சட்ட மசோதா - 2023**